**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**

**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>MCOP . No. 14/2026</u>**

**<u>நாள் : 11.03.2026</u>**

**எ.ம.சா.** 2 **திருமதி.சங்கீதா**

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

**நான் ஒசூர் சார்பு நீதிமன்றத்தில் இதே விபத்து சம்பந்தமாக நஷ்டஈடு கோரி** MCOP No.214/2017 **என்ற வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கை நானும், முத்தரசன் என்பவரும் சேர்ந்து தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி முத்தரசன் எனது இளவர் மகன் ஆவார். மேற்படி வழக்கு விசாரணையின்போது நான் ஆஜராகாததால்** 11.12.2023**ஆம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. சாட்சியிடம் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாக அழுத்தமாக தெரிவித்ததற்கு பின்னிட்டு அதுபற்றி தனக்கு தெரியாது என்று கூறுகிறார். எனக்கும், தமிழரசனுக்கும் திருமண பந்தத்தை காட்டும் ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு திருமணமான தேதி** 07.03.2012. **ஒசூர் முக்கண்டபள்ளியில் உள்ள பெருமாள் கோவிலில் திருமணம் நடந்தது. திருமணம் சம்பந்தமாக திருமண ரசீது எதுவும் கொடுக்கவில்லை. எங்களது திருமணத்தை திருமண பதிவேட்டிலும் பதிவு செய்யவில்லை. அந்த கோவில் சிறிய கோவில். எங்களது திருமணம் பதிவு செய்யப்படவில்லை. எங்களது திருமணம் பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்ட போதிலும் திருமண அழைப்பிதழ் அச்சடிக்கப்படவில்லை. திருமணம் எளிய முறையில் நடந்தது. திருமணத்திற்கு எனது குடும்பத்தினர் மட்டும்தான் வந்திருந்தார்கள். தமிழரசன் வீட்டிலிருந்து யாரும் வரவில்லை. எங்களது திருமணம் நடந்த தேதியிலோ அதற்கு முன்போ திருமணம் பற்றி விவரங்கள் தமிழரசன் குடும்பத்திற்கு தெரியாது. அதற்கு பிறகு தெரிந்துக்கொண்டார்கள்.** 1 ½ **மாதம் கழித்து தமிழரசனின் தம்பி தெரிந்துக்கொண்டார். தமிழரசன் ஆம்பூரை அடுத்துள்ள காம்பன்தட்டு என்ற ஊரைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். அவர் விபத்து சமயத்தில் ஓட்டுநர் வேலை**

செய்து வந்தார் என்றால் சரிதான். அவர் ஒசூருக்கு வருவதற்கு முன்பு குடும்பத்துடன் காம்பன்தட்டு கிராமத்தில்தான் குடியிருந்து வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2010ல் ஒசூருக்கு குடி வந்ததாக சொன்னார்கள். 2010க்கு முன்பு அவரது குடும்பத்துடன் சொந்த ஊரில் குடியிருந்ததாக சொன்னாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தமிழரசனின் குடும்பத்திற்கு தெரியாமல் திருமணம் செய்துகொண்ட நிலையில் அதை பதிவு செய்ய முயற்சி செய்தேனா என்றால் இல்லை. எனது குடும்ப சூழ்நிலை அவ்வாறான நிலையில் இருந்தது. அந்த வயதில் எனக்கு அவ்வளவு விவரமும் இல்லை என்று சாட்சி கூறுகிறார். தமிழரசனுக்கு ஏற்கனவே உஷா என்பவருடன் 2-4 வரையிலான மனுதாரர்கள் பிறந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அதை பற்றி தமிழரசன் என்னிடம் எதுவும் சொல்லவில்லை. எங்களது திருமணத்திற்கு பிறகு 1 ½ மாதம கழித்து வந்த தமிழரசனின் தம்பியாவது தமிழரசன் முந்தைய திருமணம் பற்றி சொன்னாரா என்றால் இல்லை. அதற்கு பின்னிட்டு தமிழரசனின் தாயார் என்னை அவ்வாப்போது தொடர்பு கொண்டு பேசினார். விபத்திற்கு பின்னிட்டாவது தமிழரசனின் முந்தைய திருமணம் பற்றியும், பிள்ளைகள் பற்றி தெரிந்துகொண்டேனா என்றால் ஆமாம். விபத்திற்கு பின்னிட்டு தமிழரசனின் உடலை சடலக்கூராய்வு செய்த பிறகு அவரது மனைவி உஷாவிடம்தான் ஒப்படைத்தார்கள் என்றால் சரியல்ல. தமிழரசனின் பெற்றோர்களிடம்தான் ஒப்படைத்தார்கள். தமிழரசனின் உடலை அவரது சொந்த ஊருக்கு சென்று அடக்கம் செய்தார்கள் என்றால் சரிதான். தமிழரசன் இறந்ததற்கு பின்னிட்டு நான் ஒசூர் நீதிமன்றத்தில் மோட்டார வாகன இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் தமிழரசனுக்கு பெற்றோர்களும், முந்தைய மனைவி உஷா மற்றும் பிள்ளைகள் இருப்பது பற்றி தெரியும் என்றால் சரிதான். மேற்படி நபர்களை மோட்டார் வாகன வழக்கில் சேர்த்தேனா என்றால் இல்லை. அதுபற்றி எனது வழக்கறிஞர் எதுவும் சொல்லாததால் சேர்க்கவில்லை. எ.ம.சா.ஆ.12 ஆவணத்தில் 29.02.2016ஆம் தேதியிட்ட வாடகை ஒப்பந்தம் எழுதப்பட்ட காலகட்டத்தில் தமிழரசன் உயிரோடு இருந்தார் என்றால்

சரிதான். தமிழரசனின் பெயரில் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். மேற்படி வீட்டின் உரிமையாளரான வையாபுரி ஆண் நபர் ஆவார். அதில் வையாபுரியின் தகப்பனார் பற்றிய விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வையாபுரி மிகவும் வயதானவர். அவரது படிப்பு விவரம் எதுவும் எனக்கு தெரியாது. எ.ம.சா.ஆ.12 கைரேகை இருக்கும் நிலையில் அது யாருடையது என்று சொல்லப்படவிலலை என்றால் சரியல்ல. அது வீட்டின் உரிமையாளருடையது என்று சாட்சி கூறுகிறார். வாடகை ஒப்பந்தத்தில் சாட்சிகள் யாரும் கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். வாடகை ஒப்பந்தம் ஏற்பட்ட கால கட்டத்தில் தமிழரசனின் பெயரில் ஏற்படுத்தாமல் எனது பெயரில் ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு குறிப்பிட்ட காரணம் எதுவும் இல்லை. அந்த சமயத்தில் தமிழரசனின் பெயரில் ஆதார் அடையாள அட்டை இருந்ததா என்றால் இல்லை. தமிழரசனுக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் இருந்தது. ஆனால் விபத்திற்கு அது என்ன ஆனது என்று தெரியவில்லை. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். தமிழரசனின் வாக்காளர் அடையாள அட்டை ஒசூரில் இருந்த சமயத்தில் எப்போது கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. விபத்திற்கு முன்பு தொரப்பள்ளி அக்ரஹாரம் என்ற முகவரியில் வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட்டது. அது திருமணத்திற்கு முன்பு வழங்கப்பட்டது. எ.ம.சா.ஆ.10 வாக்காளர் அடையாள அட்டையானது 23.01.2016ஆம் தேதியில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ஒசூரில் வசித்த இருந்த கட்டத்தில் நான் வசித்த வீட்டின் முகவரிக்கு குடும்ப அட்டை வழங்கப்பட்டதா என்றால் இல்லை. நான் பிறந்ததிலிருந்தே ஒசூரில்தான் குடியிருக்கிறேன். 26.04.2016ஆம் தேதியில்தான் எனக்கு முதன்முதலாக வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட்டது என்றால் சரிதான். (எ.ம.சா.ஆ.7). அது தமிழரசன் விபத்தில் இறந்தபின்னிட்டு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதேபோல் எ.ம.சா.ஆ.6 ஆவணமும் தமிழரசன் விபத்தில் இறந்தபின்னிட்டு வழங்கப்பட்டது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.4 பிறப்பு சான்றிதழில் கண்ட விவரங்கள் நான் தெரிவித்த தகவலின்

அடிப்படையிலானது என்றால் சரிதான். தமிழரசனின் இறப்பு சான்று ஒசூர் முனிசிபாலிடியில் பெறப்பட்டது என்றால் சரிதான்., அதில் தமிழரசனின் பெற்றோர்கள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.5 முதல் 12 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்கு ஏற்றாற்போல் தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. தமிழரசன் 2012ல் என்னை திருமணம் செய்துகொண்டதாக சொல்லப்பட்ட தகவல் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. நான் தமிழரசனின் சட்டப்படியான மனைவி அல்ல என்றால் சரியல்ல. நான் தமிழரசனின் சட்டப்படியான மனைவி அல்ல என்பதாலும், நான் தமிழரசனின் வருமானத்தை முழுமையாக சார்ந்திருக்கவில்லை என்பதாலும் எனக்கு எந்த இழப்பீடும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த மனு தாக்கல் செய்த மனுதார்களுக்கும், மற்றும் தமிழரசனின் பெற்றோர்களுக்கும்தான் சட்டப்படியாக விபத்திற்குண்டான நஷ்டஈடு கிடைக்கத்தக்க வகையில் அதை தடை செய்யும் வகையில் நான் பொய்யாக கட்சியாடி வருகிறேன் என்றால் சரியல்ல.

(மேற்படி மனுதாரர் தரபபு குறுக்கு விசாரணையை 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஏற்றுக்கொள்வதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது)

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.